# இவை யாவும் எதைப் பற்றியது? [1:8]

*அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலின் எளிய புறக்குறிப்பு, அதிகாரம் 1ல் வசனம் 8ல் உள்ளது: (1) எருசலேமில் சாட்சிகள் (1-7), (2) பலஸ்தீனத்தின் எஞ்சிய பகுதிகளில் சாட்சிகள் (8-12), (3) பூமியின் கடைசி பரியந்தமும் சாட்சிகள் (13-28). சிலர் இவற்றில் முதல் இரண்டு பகுதிகளையும் ஒன்றாக்கி, இந்நூலை இரண்டு பாகங்களாகப் பிரிக்கின்றனர். சிலர், மேல் உள்ளதில் முதல் இரண்டு பாகங்களை அப்படியே வைத்துக் கொண்டு, மூன்றாம் பாகத்தை இரண்டாக்கி மொத்தம் நான்கு பாகங்களாகப் பிரிக்கின்றனர்: (3) பவுலின் சுவிசேஷப் பிரயாணங்கள் (13-21) மற்றும் (4) பவுல் கைது செய்யப்படுதலும் ரோமாபுரிக்குப் பயணம் செய்தலும் (22-28). சிலர் இந்நூலை முற்றிலும் வித்தியாசப்பட்ட வகையில் பிரிக்கின்றனர். உதாரணமாக, லூக்காவின் "தொகுப்புரை களை" (அப். 6:7; 9:31; 12:24; 16:5; 19:20; 28:30, 31) இந்நூலின் இயற்கையான பிரிவு பாகங்களாகப் பயன்படுத்தி இந்நூலை ஆறு பாகங்களாக்குகின்றனர்.*

*நமது படிப்பிற்கென்று, அப். 1:8ல் உள்ள மூன்று பிரிவுகளை, மூன்றாம் பிரிவில் துணைப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தி நாம் பயன்படுத்துவோம்:*

1. *எருசலேமில் சாட்சிகள் (1-7).*
2. *பலஸ்தீனத்தின் எஞ்சிய பகுதிகளில் சாட்சிகள் (8-12).*
3. *பூமியின் கடைசி பரியந்தமும் சாட்சிகள் (13-28).*
   - *அ. பவுலின் சுவிசேஷப் பிரயாணங்கள் (13-21).*
   - *ஆ. பவுல் கைது செய்யப்படுதல் மற்றும் அவருடைய ரோமாபுரிப் பயணம் (22-28).*

# ஆய்வுக் கருத்துக்கள்

*நடபடிகள் நூலானது பல்வேறு மட்டங்களில் கற்கப்பட முடியும். அந்த நூலின் பல்வேறு அம்சங்களான போதனை யிலிருந்து ஒன்றைத் தெரிந்து கொண்டு அந்நூல் முழுவதையும் ஒருவர் கற்றுப் பயனடைய முடியும், பின்பு உடனே வேறொரு அம்சத்தில் மறுபடியும் இந்நூலைக் கற்று அதே அளவு பயனடைய முடியும். அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலை அணுகும் பலவிதங்களில் சில, இங்கு கீழே தரப்பட்டுள்ளன:*

***1. கடந்த காலங்கள்***

*நடபடிகள் நூலை, அது ஒரு வரலாறு என்ற கண்ணோட்டத்துடன், கடந்த காலத்தில் நடந்தவைகள் பற்றி அறிய அதைப் படிக்கலாம்: என்ன, எங்கே, எப்போது, ஏன் நடந்தது? இது மக்களை மையமாக வைத்துப் படிக்கும்போது மிக ஆர்வமுள்ளதாயிருக்கும். லூக்கா எழுதிய இவ்வரலாறு ஆர்வமற்றதோ அல்லது நபர்த்துவமற்றதோ அல்ல. அவர், தேவனுடைய பிள்ளைகளை ஊக்குவிப்பதற்கு இதை ஒரு வழியாகப் பயன்படுத்தினார்.*

*பழைய ஏற்பாட்டு வரலாற்றை எழுதிய மாபெரும் எழுத்தாளர்களின் பாதச் சுவட்டை பின்பற்றுபவராக லூக்கா தம்மையே கண்டதில் சந்தேகமில்லை. அவர் வெறும் வரலாற்றையல்ல மாறாக ஒரு பரிசுத்த வரலாற்றை எழுதினார். பரிசுத்த ஆவியானவர் (அப். 13:2; 15:25; 16:6), தூதர்கள் (அப். 5:19,20; 19:20; 8:26; 27:23), ஏவப்பட்ட தீர்க்கதரிசிகள் (அப். 11:28; 20:11, 12), இயேசு தாமே அளித்த விசேஷ தரிசனங்கள் (அப். 18:9; 23:11) ஆகியவை மூலம், தேவன் மனிதர்களின் வாழ்வில் அசைவாடினார்.*

***2. நோக்கங்கள்***

*தெய்வீக நோக்கங்கள் அல்லது உபதேசங்கள் என்ற அடிப்படையில் நடபடிகள் நூலைக் கற்கலாம். இந்நூலில், இரட்சிப்பைப் பற்றிய உண்மைகளை நாம் காண முடியும். தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்பட்டது. (நடபடிகள் நூலில் தேவனுடைய வார்த்தையைப் பற்றிய நாற்பதுக்கும் மேற்பட்ட குறிப்புகள் காணப்படுகின்றன.) பிரசங்கம்*

கிறிஸ்துவை மையமாகக் கொண்டிருந்தது. அதற்கான பதில் செயல் (விசுவாசம், மனந்திரும்புதல், ஞானஸ்நானம்), கர்த்தருக்குத் தம்மை ஒப்புக் கொடுக்கும் பதில்செயலாய் இருந்தது.

சபையைப் பற்றிய சத்தியங்கள், இரட்சிப்பு என்ற கருத்துடன் தொடர்புடையவைகளாய், நடபடிகள் நூலில் காணப்படுகிறது. சுவிசேஷ நூல்களின் திறவுகோல் வார்த்தை யாக ''இராஜ்யம்''[1] என்ற வார்த்தை ''சபை'' என்று சில இடங்களில் மட்டும் குறிக்கப்படுவதாக உள்ளது. நடபடிகள் நூலில் "சபை" என்ற வார்த்தையே திறவுகோல் வார்த்தையாக உள்ளது. ''சபை'' என்ற வார்த்தை நடபடிகள் நூலில் இருபதுக்கும் மேற்பட்ட இடங்களில் உள்ளது. அவைகளில் ஒரே ஒரு இடத்தில் அது "இராஜ்யம்"[2] என்று குறிப்பிடப் படுகிறது. நடபடிகள் நூலில் நாம், சபையின் ஆராதனை, சபையின் ஊழியம், சபையின் அமைப்பு, சபையின் ஒருமைப் பாடு, சபையின் ஒழுக்கம் ஆகியவை பற்றி கற்றுக் கொள்கிறோம்.

பரிசுத்த ஆவியானவரைக் குறித்த தேவனுடைய சத்தியம் பற்றியும், நாம் நடபடிகள் நூலில் கற்றுணர முடியும். தம்மையே வெளிப்படுத்திக் கொள்வது பரிசுத்த ஆவியானவரின் நோக்கமாக இல்லாவிட்டாலும், பரிசுத்த ஆவியானவரின் கிரியைகள்பற்றி நடபடிகளில் ஐம்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் நாம் படிக்கிறோம். பரிசுத்த ஆவியானவரின் அற்புதக் கிரியைகள் மற்றும் பொதுவான கிரியைகள் பற்றி இந்நூலில் நாம் கற்றுக் கொள்கிறோம்.

### 3. பிரசங்கித்தல்

பிரசங்கத்தை ஆராயும் நோக்கத்தில் நடபடிகள் நூலைப் படிக்கலாம். இந்நூலில் உள்ள பிரசங்கங்களை ஆராய்ச்சி செய்வது மிகப்பயனுள்ளதாகும். ஆவியானவரால் ஏவப்பட்ட பேச்சாளர்கள் யூதர்களுக்குப் பிரசங்கித்தனர், அவர்கள் வித்தியாசமான பின்னணிகளைக் கொண்ட புறஜாதியார் களையும் அணுகினர், ஒரு சுவிசேஷகர், சபையின் மூப்பர் களுக்குக் கூடப் பிரசங்கித்துள்ளார் (அப். 20:17-35)!

### *4. ஜெபம்*

*ஜெபம் என்ற கருதுபொருளின் அடிப்படையில் நடபடிகளைப் படிக்கலாம். ஆதியில் இருந்த சீஷர்கள் ஜெபம் செய்த சந்தர்ப்பங்கள், பதிவு செய்துள்ள ஜெபங்கள் இவற்றைக் கவனித்துப் பார்க்கலாம். இயேசுவைப் போலவே அவருடைய சீஷர்கள் யாவரையும் ஜெபம் நிறைவாக்குகின்றது.*

### *5. வளர்ச்சி*

*ஆதி சபை எண்ணிக்கையளவில் அடைந்த வளர்ச்சியின் அடிப்படையில் நடபடிகள் நூலைக் கற்கலாம். ஆதிசபை விருவிருப்புடன் வளர்ந்தது! (அப். 6:7; 9:31; 12:24; 16:5; 19:20; 28:30, 31ஐ வாசிக்கவும்). எப்படி அது அவ்வளவு விரைவாக வளர்ந்தது? அதன் இரகசியம் என்ன? கிறிஸ்தவ வளர்ச்சியின் விளைவை ஏற்படுத்திய சில காரணங்களை இந்நூலில் நாம் படிக்க முடியும். உதாரணமாக, ஒவ்வொரு கிறிஸ்தவரும் சுவிசேஷத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்ப வேண்டும் என்று லூக்கா வலியுறுத்துகிறார். நடபடிகள் நூலில் முக்கியமாக சுவிசேஷ ஊழியமே வலியுறுத்தப்படுகிறது. அதாவது இயேசுவை மற்றவர்களுக்குக் கூற வேண்டும். மேலும் இந்த சுவிசேஷம் ஒவ்வொருவருக்கும் உரியது என்று வலியுறுத்துகின்றது. யூதர்களைப் போன்றே புறஜாதியாருக்கும் சுவிசேஷம் உரியது என்ற உண்மையைப் பற்றிய அக்கறை இப்புத்தகத்தின் பெரும்பகுதியில் காணப்படுகின்றது. மேலும், பணக்காரர், ஏழை, கல்வி கற்றவர், கல்வி கல்லாதவர், ஆண்கள், பெண்கள், இளைஞர், முதியவர், ஒழுக்கம் உள்ளவர், ஒழுக்கம் இல்லாதவர் போன்ற அனைத்துத் தரப்பினருக்கும் இச்சுவிசேஷம் உரியது என்ற உண்மையும் இந்நூலில் வலியுறுத்தப் படுகின்றது. (மனமாற்ற உதாரணங்களையும், அவைகளின் பாகுபாடுகளையும் எண்ணிப் பாருங்கள்.)*

## கடினமான பணி

*முன்பே குறிப்பிட்டபடி, நடபடிகள் நூலானது ஒவ்வொரு முறையும் வேறுபட்ட விஷயங்களுக்கு முக்கியத்துவம் அளித்து, மறுபடி மறுபடி பயன்தரும் வகையில் படிக்கக் கூடியதாய் இருக்கிறது. இருப்பினும் இந்நூலை ஒரு முறை படித்து*

முடிக்கவே இப்பாடப் பகுதியில் நாம் வாய்ப்பு பெறுவோம். எனவே இங்கு சுட்டிக்காட்டப்பட்ட கருத்துக்களோடு இன்னும் சிலவற்றையும் தொட்டுச் செல்ல நான் முயற்சி செய்வேன். எந்தவொரு கருத்தையும் நியாயப்படுத்த நான் முயற்சி செய்ய இயலாது, ஆனால் முடிந்த வரையில் உங்கள் சிந்தனையை இப்பாடப் பகுதிகளின் மூலம் தூண்டிவிட நான் முயற்சி செய்வேன். பிறகு நீங்கள் உங்கள் வாழ்வின் வருங் காலத்தில் நடபடிகள் என்ற இம்மாபெரும் நூலில் இன்னும் ஆழமாய் ஆராய்ச்சி செய்வதில் இறங்க முடியும்.

நடபடிகள் நூலைப் பற்றிய மற்ற அநேக தொகுதிகளைப் போல் இல்லாமல், எனது அணுகுமுறை, பிரசங்கம் சார்ந்த தாகவே இருக்கும். எனவே இப்பாடங்களை பிரசங்க மேடை யிலும், வகுப்பறையிலும் பயன்படுத்த முடியும். இவைகளை எழுதத் தொடங்கும்போது (முன்னுரையைத் தவிர்த்து) மொத்தம் இருபத்தி ஆறு பாடங்களில் நடபடிகள் நூல் முழுவதையும் விளக்கவுரை எழுதி முடிப்பதே எனது திட்டமா யிருந்தது, இதனால் இப்பாடங்களை, நீங்கள் விரும்பினால் ஆறுமாத காலத்திற்கு கற்றுக் கொள்ளப் பயன்படுத்தலாம். ஆனால் விரைவிலேயே அநேக பாடங்கள் மிக நீளமாகவும், விரிவாகவும் இருந்ததைக் கண்டு அவைகளை இரண்டு அல்லது மூன்று பாடங்களாகப் பிரித்தேன். நடபடிகள் நூலில் இருப்பத்தியெட்டு அதிகாரங்கள் உள்ளதாலும், அவைகளில் அநேக அதிகாரங்கள் மாபெரும் சத்தியங்கள் அடங்கியதாகவும் இருப்பதால், என்னுடைய அநேக பாடங்கள் சராசரி வகுப்பு அல்லது பிரசங்கத்திற்கு மிக நீண்டதாயிருக்கும். நீங்கள் தேவையானதை தேர்ந்தெடுக்க வேண்டியதாயிருக்கும். உங்கள் மாணவர்களின் ஆவிக்குரிய உடனடித் தேவைகளே இதற்கு திறவுகோல் காரணிகளாகும்.

என்னுடைய அணுகுமுறை, பிரசங்கம் சார்ந்ததாயிருந் தாலும், வசனப்பகுதியின் மிக அவசியமான திறவுகோல் கருத்துக்கள் யாவற்றையும் கொடுக்க நான் விரும்புகிறேன். பாடத்தில் அவைகளை கொடுத்து முடிக்க இயலாத பட்சத்தில், அடிக்குறிப்புகள் அல்லது துணைக்கட்டுரைகளில் அவை களைக் கொடுக்க முயற்சி செய்வேன். இத்தொடர்களின் விஷயங்கள் பின்னால் ஒரு நிரந்தரமான அமைப்பில் வெளியா

வதால், நான் விரிவாக விளக்கமளிக்கத் தவறியதாக எதையேனும் நீங்கள் கருதினால், அதை எனக்குத் தெரியப்படுத்துவதே நீங்கள் எனக்குச் செய்யும் மிகப் பெரிய சேவையாகும். நீங்கள் கூற விரும்பும் எந்த ஒரு விமர்சனத்தையும் நான் வெகுவாகப் பாராட்டுவேன்.

இக்கட்டுரைகளை முடிந்த அளவுக்கு நடைமுறைக்குரியதாய் ஆக்குவதற்காக, இக்கட்டுரைகளை வேறொரு முறையில் அணுகுவதற்குப் பிரசங்கப் புறக்குறிப்புகளையும், செய்திகளை உணர, மற்ற சில கூடுதல் குறிப்புகளையும் நான் தரவிருக்கிறேன். இடமிருந்தால் சில துணைக்கட்டுரைகளையும் நான் இத்தொடர்களில் உள்ளடக்கச் செய்வேன். விலைமதிப்பற்ற நூலாகிய ‘‘நடபடிகளை’’ போதிக்கவும், பிரசங்கிக்கவும் இவ்விஷயங்கள் அடங்கிய கட்டுரைகள் உங்களைத் தூண்டும் என்று நம்புகிறேன்.

அடிக்குறிப்புகளை நிதானித்து ஆராய்வதன்மூலம், நான் வழக்கம் போலவே, இக்கட்டுரைகளைத் தயார் செய்ய பல நூல்களிலிருந்து கருத்துக்களை தேர்வு செய்தது விளங்கும். நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக நான் நடபடிகள் நூலைப் போதித்து, பிரசங்கித்து வருவதால், இந்நூலைப் புரிந்து கொள்ள எனக்கு எல்லா வகையிலும் உதவின அநேகருக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். இருப்பினும், அபிலைன் கிறிஸ்தவ பல்கலைக் கழகத்தில் 1954ன் வசந்த காலத்தில் நடபடிகள் பாடத்தை எனக்குப் போதித்த கிரேக்க கல்வியாளர் J.W. இராபர்ட்ஸ் அவர்களை இங்கு நான் அவசியம் குறிப்பிட்டாக வேண்டும். மேலும், J.W. மெக்கார்வியின் classic “New Commentary on Acts of Apostles” என்ற நூலின் குறிப்புகளை நான் அநேக வருடங்களாகத் திரும்பத் திரும்பப் படிக்கின்றேன். இந்தத் தொடருக்காக நான் முதல்முறையாக என்னால் இயன்ற அளவு (நேரம் இருந்தால்) ஆழமான முறையில் இந்நூலைப் படிக்க விருக்கின்றேன்.

## முடிவுரை

நடபடிகளில் கூறப்பட்டுள்ள வருடங்களில் மட்டும் இயேசு “தொடர்ந்து செயலாற்றவும் போதிக்கவும்” இல்லை.

*அவருடைய ஜீவனுள்ள பிரசன்னம் இன்றும் அவரது சரீரமாகிய சபையில் (எபே. 1:22, 23) தொடர்ந்து நிலவுகின்றது. அவர் நம் மூலமாகவும் தொடர்ந்து செயல்படுகிறார். நாம் அவரது கண்களாக, காதுகளாக, கைகளாக, கால்களாக இருக்கிறோம் (1 கொரி. 12:12-27). தேவன் தமது சபையின் சரித்திரத்தை இன்றும் பரலோகத்தின், நித்தியமான பதிவேடு களில் எழுதிக் கொண்டிருக்கிறார். தற்பொழுது அவர் 20ம் தொகுதியை முடித்து 21ம் தொகுதியை எழுதிக் கொண்டிருக் கின்றார். அவர் எழுதுகின்ற விஷயங்களில் அவர் திருப்தி யடைகிறார் என்று நீங்கள் எண்ணுகின்றீர்களா? புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களின் உபதேசங்களை மட்டுமல்ல, அவர்களது ஆவி மற்றும் உற்சாகத்தையும் நாம் மறுபடி பெற்றுக்கொள்ள தேவன் உதவுவாராக! இதை நிறைவேற்ற இந்தப்பாடங்கள் உதவ வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன்!*

## *பிரசங்கக் குறிப்புகள்*

*உங்கள் பாடங்கள் அல்லது பிரசங்கங்களுக்கு (நடபடிகள் நூலுக்கானவைகளுக்கு) ஒரு முன்னுரை தர நீங்கள் விரும்பி னால், ''கடினமான பணி'' என்ற பகுதியைப் பயன்படுத்தி, நீங்கள் இப்பாடங்களை எவ்விதம் தரத் திட்டமிட்டிருக்கிறீர் கள் என்று முன்னுரை தரலாம்.*

*டாண் வில்லிங்ஹாம் என்பவரின், "உலகத்தைக் கலக்குதல்" என்ற பிரசங்கமானது ஒரு ஒலிப்பதிவு நாடாவில் 60'களின் பிற்பகுதியில் கிறிஸ்தவ பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டது. இந்தப்பாடத்தில், டாண் அவர்கள் ஆதி சபையார் அவ்வளவு வல்லமையுள்ளவர்களாக, வெற்றி கொண்டவர்களாக இருக்கக் காரணத்தைக் குறிப்பிட்டு, அவர்களின் உதாரணத்தை நாமும் பின்பற்றும்படியாக ஆலோசனை கொடுத்துள்ளார். அவரு டைய பல கருத்துக்கள், நடபடிகள் நூலில் இருந்து எடுக்கப் பட்டவைகளாகும். அவர் ''நடக்கை'' என்ற விஷயத்தை வலியுறுத்தினார்: கிறிஸ்தவத்தைப் பற்றிய ஆதி கிறிஸ்தவர் களின் நடக்கை, அவர்களின் வாழ்க்கை, உபதேசம், மற்றும் ஜெபம் இவைகளை அவர் குறிப்பிட்டுள்ளார். நீங்கள்*

இந்நூலைப் படிக்கும்போது, இந்நாளில் நமக்குத் தேவையான, ஆதி கிறிஸ்தவர்களின் பண்பு நலன்களைக் கவனியுங்கள். இவ்வடிப்படையில் உங்கள் சொந்தப் பாடங்களை தயார் செய்யுங்கள்.

---

குறிப்புகள்

*[1]ஏனென்றால், மேசியா ஒரு இராஜ்யத்தை ஏற்பாடுத்துவார் என்பதே பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் முக்கிய கருத்து ஆகும். [2]ஆயிர வருட அரசாட்சி என்ற கருத்தை நம்புவோர், தேவன் இராஜ்யத்தை ஸ்தாபிக்க விரும்பாததால் அதற்குப் பதிலாக சபையை ஸ்தாபித்தார் என்று கூறுகின்றனர். (சொல் விளக்கப் பகுதியைக் காணவும்.)*